# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශේෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதிவிசேஷமானது

අංක 14,497—1965 සැප්තැම්බර් 4 වැනි සෙනසුරාදා—1965.9.4

14,497ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]

## விலைக்கட்டளைகள்

**விலைகட்டளை இல. KL 109**

**உப உணவுப் பொருட்கள்—மைசூர் பருப்பு**

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 173) 4 ம் பிரிவை அதன் 3 (2) உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து என்மேற் பாரிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு களுத்துறை பரிபாலன மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) சார்ள்ஸ் சாம்சன் ரணசூரிய ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 30 ந் திகதி வெளியான 13,744 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரமான 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 27 ந் திகதியைக்கொண்ட KL 101 ம் இலக்க விலைக் கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆககூடிய மொத்த விலையாகவும் இறக்குமதி செய்யப்பட்ட உடைத்த மைசூர் பருப்பு I ம் ரகமும் II ம் ரகமும் இந்த விலைக்குக் கூடுதலாக 1 ம் பத்தியில் குறிப்பிட்ட இடங்களுக்கு விற்றலாகாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன் ;

(3) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆககூடிய சில்லறை விலையாகவும் இறக்குமதி செய்யப்பட்ட உடைத்த மைசூர் பருப்பு I ம் ரகமும் II ம் ரகமும் இந்த விலைக்குக் கூடுதலாக 1 ம் பத்தியில் குறிப்பிட்ட இடங்களுக்கு விற்றலாகாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன் ;

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) குறித்த அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப் படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆககூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையால் ஆககூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இககட்டளையால் அப்பொருளுககு விதிக்கபபட்ட ஆககூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில், அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆககூடிய விலையையும் வாங்குபவரால் நன்ருகப் பார்க்கக்கூடியவாறு அககொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞை யிடுகிறேன் ;

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) இக்கட்டளையால் ஆககூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின 2 ம், 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அபபொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(9) குறித்த அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு ஆவணி மாதம் 31 ந் திகதி காலை 9.00 மணிக்கு களுத்துறையில் கையொப்பமிடப்பட்டது.

சீ. எஸ். ரணசூரிய,
உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
களுத்துறை மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

| பகுதி 1<br>இடம் | பத்தி 2<br>மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை<br>இறக்குமதி செய்யப்பட்ட உடைத்த மைசூர் பருப்பு (ரகம் I)<br>ரூ. ச. | பத்தி 3<br>மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய விலை<br>மைசூர்பருப்பு (ரகம் II)<br>ரூ. ச. |
|---|---|---|
| ரைகம் கோரளைக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராமசேவக பிரிவு இல. 604–655<br>பாணந்துறை தொட்டமுனைக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராமசேவக பிரிவு இல. 656–713<br>களுத்துறை தொட்டமுனைக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராமசேவக பிரிவு இல. 714–770 | 53 85 | 44 03 |
| பஸ்துன் கோரளைக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராமசேவக பிரிவு இல. 771–810<br>கங்கபொட பத்துக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராம சேவக பிரிவு இல. 811–825<br>மகபத்துக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராம சேவக பிரிவு இல. 826–850 | 54 15 | 44 35 |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>சில்லறை வியாபாரி ஒருவர் இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய விலை<br>இறக்குமதி செய்யப்பட்ட உடைத்த மைசூர்பருப்பு (ரகம் I)<br>ரூ. ச. | பத்தி 3<br>சில்லறை வியாபாரி ஒருவர் இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய விலை<br>மைசூர்பருப்பு (ரகம் II)<br>ரூ. ச. |
|---|---|---|
| ரைகம் கோரளைக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராம சேவக பிரிவு இலக்கம் 604–655<br>பாணந்துறை தொட்டமுனைக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராமசேவக பிரிவு இல. 656–713<br>களுத்துறை தொட்டமுனை காரியாதிகாரி பிரிவு—<br>கிராம சேவக பிரிவு இல. 714–770 | 0 53 | 0 44 |
| பஸ்துன் கோரளைக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராம சேவக பிரிவு இல. 771–810<br>கங்கபொடபத்துக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராம சேவக பிரிவு இல. 811–825<br>மகபத்துக் காரியாதிகாரி பிரிவு—<br>கிராம சேவக பிரிவு இல. 826–850 | 0 53½ | 0 44½ |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

9–246

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.